ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2470/04 - 2026 ජනවාරි මස 05 වැනි සඳුදා - 2026.01.05

*2470/04 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

ச.வ.பி. -3/2022

**2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்சண நாணாயக்கார ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் மாலைத்தீவு குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையிலான 2025,யூலை மாதத்தில் கையொப்பமிடப்பட்ட பொருத்தனை தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் மாலைத்தீவு குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட இப் பொருத்தனை குற்றவியல் கருமங்களில் பரஸ்பர சட்ட உதவியளித்தல் தொடர்பில் கையாளுவதுடன், மற்றவற்றுக்கிடையில், பயங்கரவாதத்துடன் தொடர்பான குற்றங்கள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்காகவுள்ள நிதிகளையும் குற்றச் செயல்களின் வரும்படிகள் மற்றும் சாதனங்களையும் கண்டறிதல், தடை செய்தல், இழப்பித்தல், மற்றும் பறிமுதல் செய்தல் உள்ளிட்ட குற்றங்களைத் தடுத்தல், புலனாய்வு செய்தல், வழக்குத் தொடருதல் மற்றும் ஒடுக்குதல் தொடர்பான குற்றவியல் கருமங்களில் ஒத்துழைப்பதனூடாகவும் பரஸ்பர சட்ட உதவியளிப்பதனூடாகவும் பொருத்தனையின் இரு திறத்தவர்களின் பங்கும் மேம்படுத்தப்பட்ட பயனுறுதியுடன் சம்பந்தப்பட்டதாகிறது.

**ஹர்ஷண நாணாயக்கார**,
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
2025, திசெம்பர் 24.

EOG 01 - 0033